நீலகிரி மாவட்டத்தில் கன மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள்:

# மீட்பு - நிவாரண நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 21-

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் நடைபெற்ற ஆய்வுக் கூட்டம் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை குறித்து, கடந்த மூன்று நாட்களாக மாவட்டத்துக்கான பொறுப்பு அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்டவர்களுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் நிவாரணப் பணிகள் குறித்த உத்தரவுகளைத் தொலைபேசி வாயிலாக வழங்கிக் கொண்டிருந்தேன்.

மழை தொடரும் நிலையில், எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து நேற்று தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

---

## விருதுநகர் வடக்கு மாவட்டம்

# சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்!

## வேட்பு மனு தாக்கல்

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகர பொருளாளர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

**விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரப் பொருளாளர் பொறுப்புக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2024 ஜூலை 24 (புதன்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.**

**தகுதி விவரம்**

வேட்பு மனு முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மாநகரத்திற்கு உட்பட்ட வட்டச் செயலாளர்கள் பகுதிக் கழக நிர்வாகிகள் பகுதிக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகரப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

**வேட்புமனுக் கட்டண விவரம்**

**அவைத் தலைவர் பொறுப்பு**
**பொறுப்புக்கு வேட்புமனுக் கட்டணம்... ரூ.5000/-**

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.500/ - கட்டணம் செலுத்தி தலைமைக் கழகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 20.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



இராயபுரம் தொகுதி கழகத்தைச் சார்ந்த வி.ஜே.டெக்ஸ் உரிமையாளர் வி.வேலாயுதம் தாயார் கோவிந்தம்மாள் அவர்கள் மறைவு செய்தி அறிந்து சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி நேரில் சென்று அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கட்பீஸ் அ. பழனி
### ஜூலை 21 (2019)



**இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**வடசென்னை மாவட்டம், சார்பு மன்ற நிர்வாகி, 10வது வட்ட பகுதிப் பிரதிநிதி, இராயபுரம் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர், 1996 முதல் 2016 வரை தொடர்ந்து இராயபுரம் பகுதிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**2006ல் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

நடப்பு கல்வி ஆண்டில் 11-ஆம் வகுப்பு பயிலும்

# பள்ளி மாணவ-மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் தொடங்கி வைத்தனர்!

*சென்னை, ஜூலை 21-*

*பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில், நடப்பு கல்வி ஆண்டில், 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தினை, சென்னை சைதாப்பேட்டை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தொடங்கி வைத்தார்.*

*தமிழ்நாடு அரசு, மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவ - மாணவியர் சிரமமின்றி பள்ளிக்கு செல்லும் வகையில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ - மாணவியருக்கும் ஆண்டு தோறும் மிதிவண்டிகள் வழங்கி வருகிறது.*

*கடந்த மூன்று ஆண்டுகளில் 823.09 கோடி செலவில் 16,73,274 மாணவ, மாணவியர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பள்ளிகள் திறந்த உடன், மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அதன்படி, நடப்பு கல்வியாண்டில் சுமார் 264.10 கோடி ரூபாய் செலவில், அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் 5,47,676 மாணவ / மாணவியர்களுக்கு மிதி வண்டிகள் வழங்கப்படவுள்ளன.*

*இதன் துவக்கமாக, நேற்று (20.07.2024), சென்னை, மேற்கு சைதாப்பேட்டையில் அமைந்துள்ள சென்னை பெண்கள் மேல்நிலை (மாந்தோப்பு) பள்ளி வளாகத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பெருமக்கள், 10 மாணாக்கர்களுக்கு மிதி வண்டிகளை வழங்கி 2024 - 2025 ஆம் கல்வி ஆண்டிற்கான திட்டத்தினை துவக்கி வைத்தனர்.*

*இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சா.விஜயராஜ்குமார், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆணையர் வா.சம்பத், சிறுபான்மையினர் நல இயக்குநர் திருமதி மு.ஆசியா மரியம், சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, பள்ளி கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன், பெருநகர சென்னை மாநகராட்சி (தெற்கு) மண்டல துணை ஆணையர் பிரவீன் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி நிலைக் குழு தலைவர் விஸ்வநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் துரைராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீதர், சுப்பரமணி, மோகன் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

---

பெ.மணிமாறன் எம்.சி. தலைமையில்

# வேளச்சேரியில் ஆலோசனைக் கூட்டம்!

*சென்னை, ஜூலை 21-*

*சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் ஆளும் கட்சி மாமன்ற கூட்ட பொருளாளர் பெ. மணிமாறன் தலைமையில் 177 வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து அரசு அலுவலர்கள் மழைக்கால அசர ஆலோசனை கூட்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் வட்டாச்சியர் அலுவலகம், ஆர்.ஐ. மாநகராட்சி செயற்பொறியாளர். உதவி பொறியாளர், சுகாதாரதுறை அதிகாரி துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர், மெட்ரோ வாட்டர், கழிவு நீர் துறை, ஐவேஸ் அதிகாரிகள், மின் ஆய்வாளர்,காவல் துறை ஆய்வாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

---

## திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

# பாளையங்கோட்டை வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், பாளையங்கோட்டை வடக்கு ஒன்றியச் செயலாளர் வேலன்குளம் எம்.முருகன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற வேலன்குளம் **எம்.கண்ணன்,** *(75, நடுத்தெரு, வேலன்குளம், மேலப்புத்தனேரி ஊராட்சி, திருநெல்வேலி மாவட்டம் - 627351)* அவர்கள் பாளையங்கோட்டை வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 20.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தூத்துக்குடி வடக்கு மாவட்டம், தூத்துக்குடி மாநகர விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.எஸ்.முத்துவேல் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 20.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## விருதுநகர் வடக்கு மாவட்டம்

# சிவகாசி மாநகரம்

## 4வது பகுதிக்குட்பட்ட 27 - 6வது பகுதிக்குட்பட்ட 40 ஆகிய வட்டச் செயலாளர் பொறுப்புக்கான தேர்தல்!

## வேட்பு மனு தாக்கல்

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், 4வது பகுதிக்குட்பட்ட 27 வது வட்டக் கழகச் செயலாளர் ராமராஜ் தனது பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதாலும் 6வது பகுதிக்குட்பட்ட 40வது வட்டச் செயலாளர் அ.சண்முகம் அவர்கள் வயது மூப்பின் காரணமாக செம்மையாக கழகப் பணியாற்ற முடியாத காரணத்தால் அவரை அப்பொறுப்பிலிருந்து விடு விக்கப்படுவதாலும்;

சிவகாசி மாநகரம், 4வது பகுதி, 27வது வட்டச் செயலாளர் மற்றும் 6வது பகுதி, 40வது வட்டச் செயலாளர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி,

**இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து, அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2024 ஜூலை 24 (புதன்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.**

**தகுதி விவரம்**

கடந்த 14 ஆவது தேர்தலின்பொழுது உறுப்பினராய் பதிவு செய்திருத்தல் வேண்டும் (14ஆவது தேர்தலின்பொழுது உறுப்பினராய் பதிவு செய்த உறுப்பினர் உரிமைச் சீட்டின் நகல் [ஜெராக்ஸ்] வேட்புமனுவுடன் இணைக்க வேண்டும்). மேலும், அவர்கள் தற்போது சம்பந்தப்பட்ட வட்டக்கிளையின் உறுப்பினராய் இருத்தல் வேண்டும்.

**வேட்புமனுக் கட்டண விவரம்**

**வட்டச் செயலாளர் பொறுப்புக்கான வேட்புமனுக் கட்டணம்: ரூ.500/-**

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ கட்டணம் செலுத்தி தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 20.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் ஆளும் கட்சி மாமன்ற கூட்ட பொருளாளர் பெ.மணிமாறன் தலைமையில் 177 வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து அரசு அலுவலர்கள் மழைக்கால அசர ஆலோசனை கூட்டம் நடை பெற்றது. இதில் வட்டாச்சியர் அலுவலகம், ஆர்.ஐ. மாநகராட்சி செயற்பொறியாளர். உதவி பொறியாளர், சுகாதாரதுறை அதிகாரி துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர், மெட்ரோ வாட்டர், கழிவுநீர் துறை, ஐவேஸ் அதிகாரிகள், மின் ஆய்வாளர்,காவல் துறைஆய்வாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ர. லோகநாதன்
### ஜூலை 21 (2022)



**இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**எழும்பூர் பகுதியில் அண்ணா படிப்பகச் செயலாளராகவும் தொடர்ந்து பகுதிப் பிரதிநிதி, வட்டச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**சென்னை தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினராக இருந்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**